**செய்தி வெளியீடு எண்: 277** **நாள்: 21.04.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **20.4.2018** அன்று தலைமைச் செயலகத்தில், எண்ணூர் கடற்பகுதியில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் சரக்கு கப்பல்கள் மோதி கச்சா எண்ணெய் கசிவு ஏற்பட்டதால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்காக, கப்பல் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட **131** கோடி ரூபாய் நிவாரணத் தொகையினை, பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த **1,11,448** மீனவ மக்களுக்கு நிவாரணத் தொகையாக வழங்கிடும் அடையாளமாக, மாவட்டத்திற்கு **7** பேர் வீதம், மொத்தம் **21** மீனவர்களுக்கு நிவாரணத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

எண்ணூர் காமராஜர் துறைமுக கடற்பகுதியில் எம்.டி.பி.டபிள்யூ மேப்பிள் சரக்கு கப்பல் மற்றும் டான் காஞ்சிபுரம் என்ற எண்ணெய்க் கப்பல் ஆகிய இரண்டு கப்பல்கள் **28.1.2017** அன்று அதிகாலை எதிர்பாராதவிதமாக மோதி விபத்துக்குள்ளானதால் கச்சா எண்ணெய் கசிவு ஏற்பட்டு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட கடற்கரை மற்றும் அதனைச் சார்ந்த கடல் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் மீனவர்கள், மீனவ மகளிர், மீன் விற்பனை செய்பவர்கள், மீன்பிடிப்பு சார்ந்த பிற தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது.

மீனவ மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **6.3.2017** அன்று பாதிக்கப்பட்ட **30,000** மீனவக் குடும்பங்களுக்கு தலா ரூ.**5000/–** வீதம், மொத்தம் **15** கோடி ரூபாய் இடைக்கால நிவாரணத் தொகையாக வழங்கினார்கள்.

மேலும், கப்பல் நிறுவனங்களிடமிருந்து உரிய நிவாரணத் தொகை பெற்றிட, பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ

மக்களிடம் இருந்து மீன்வளத்துறை வாயிலாக நிவாரணக் கோரிக்கைகான மனுக்கள் பெறப்பட்டு, ஒருங்கிணைந்த அறிக்கை அளிக்கப்பட்டது. பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி பாதிக்கப்பட்ட 1,11,448 மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிட 131 கோடி ரூபாயும், மறுசீரமைப்பு பணிகளுக்காக 10 கோடி ரூபாயும், என மொத்தம் 141 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக கப்பல் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டது.

கச்சா எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ மக்கள் தொழில் சார்ந்த முறையில் ஏழு வகையாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகையினருக்கும் நிவாரணத் தொகையின் அளவு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா 35,000/– ரூபாயும், இயந்திர மயமாக்கப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா 20,000/– ரூபாயும், இயந்திர மயமாக்கப்படாத நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா 15,000/– ரூபாயும், மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு தலா 12,000/– ரூபாயும், மீன்பிடி உபதொழிலில் ஈடுபடும் மீனவ மகளிருக்கு தலா 10,000/– ரூபாயும், மீன் விற்பனை செய்பவர்களுக்கு தலா 10,000/– ரூபாயும், மீன்பிடித்தல் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு தலா 10,000/– ரூபாயும் வழங்க முடிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிடும் அடையாளமாக சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 21 மீனவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் நிவாரணத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9